செய்தி வெளியீடு எண்:616 நாள்:26/09/2007

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு உயர்கல்வி, சுரங்கம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் டாக்டர் கே.பொன்முடி அவர்கள் தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு மற்றும் பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை 26.09.2007 அன்று சென்னை, தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வண்ணமிகு விழாவில் வழங்கினார்கள்.**

---

மாண்புமிகு உயர்கல்வி, சுரங்கம் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு அவர்கள் 26.09.2007 அன்று காலை சேப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு கனிம நிறுவன தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு வண்ணமிகு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தமிழ்நாடு கனிம நிறுவன குவாரி, சுரங்கம் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு ஆணைகளையும் மற்றும் பணியின்போது இறந்துபோன ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்கள். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

திரு. க. நந்தகிஷோர், இ.ஆ.ப., தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் அவர்களும், மற்றும் தமிழ்நாடு கனிம நிறுவன உயர் அதிகாரிகளும் அப்போது உடன் இருந்தனர். இந்நிகழ்ச்சியில் 845 தொழிலாளர்களுக்கு பதவி உயர்வும் மற்றும் 50 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளும் வழங்கப்பட்டன.

பதவி உயர்வு பெற்ற தமிழ்நாடு கனிம நிறுவன அனைத்து தொழிலாளர்களும் மற்றும் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும், பல்வேறு குக்கிராமங்களிலிருந்து வந்து கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் பெற்றுக் கொண்ட வாரிசுதாரர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர்கல்வி, சுரங்கம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியை மகிழ்வுடன் தெரிவித்தார்கள்.

பல்வேறு தொழிற்சங்கங்களுடன் செய்துகொண்ட ஊதிய ஒப்பந்தத்ததின் விளைவாக, மேற்குறிப்பிட்ட பதவி உயர்வு ஆணைகள் அமுலாக்கப்பட்டன. பதவி உயர்வு பெற்ற 845 தொழிலாளர்களில் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ரூ.1008—லிருந்து ரூ.1166/—வரை மாத சம்பளத்துடன் கூடுதலாக பெறுவார்கள்.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், உறுதுணையாக நின்று பேராதரவு காட்டி வரும் மாண்புமிகு உயர்கல்வி, சுரங்கம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9